528—

கூட்டுறவு சிறப்பு அங்காடி திறக்க நடவடிக்கை.

*4778—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்குவிடையளிப்பாரா:—

உடுமலைப்பேட்டை வட்டத்தில் மடத்துக்குளம், குமாரலிங்கம், தளி ஆகிய இடங்களில் கூட்டுறவு சிறப்பு அங்காடி திறக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உடுமலைப்பேட்டை வட்டத்தில் மடத்துக்குளம், குமாரலிங்கம், தளி ஆகியவை ஊரகப் (Rural) பகுதிகளாதலால், கூட்டுறவு சிறப்பங்காடிகள் திறக்கும் திட்டம் ஏதுமில்லை. உடுமலைப்பேட்டையில், உடுமலை நகர கூட்டுறவு பண்டகசாலை ஒரு பல்பொருள் அங்காடியை (Department Store) நடத்தி வருகிறது.

முற்பகல் 10-20

திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை தொகுதியில் அமராவதி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது மடத்துக்குளம். இங்கே சுமார் 5,000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அது மட்டுமல்ல. 20-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன. அதைப்போல கொடை வள்ளல் குமணன் வாழ்ந்த இடம் குமாரலிங்கம். இது கே. வில்லேஜ் என்றும் கூறப்படுகிறது. இங்கே முக்கிய தொழில் விவசாயம். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்கின்ற நம்முடைய இதய தெய்வம் புரட்சி தலைவி அவர்களுடைய புனித அரசு மக்களின் குறைகளைப் போக்க மடத்துக்குளம், குமாரலிங்கம், தளி ஆகிய நகரப் பஞ்சாயத்துக்களில் சிறப்பு அங்காடிகளைத் திறப்பது குறித்து மறுபரிசீலனை செய்யலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊருக்கும் ஒரு சூப்பர் மார்க்கெட் திறக்க முடியாது. இந்த மூன்று ஊர்களிலும் ஏற்கெனவே நியாயவிலைக் கடைகள் நடைபெற்று வருகின்றன. அந்த நியாய விலைக் கடைகளிலே கட்டுப்பாடற்ற பொருள்கள்—அன்கன்ட்ரோல்ட் கமாடிடீஸ்—விற்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 529, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.